முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1665

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.04.2024**, சனிக்கிழமை

1. தர்ம சக்தியாய் வாழும் அரங்கா
தவசியாக உலகோர்க்கு நன்மை புரிய
பெருமைமிக்க ஆறுமுகன் என் அவதாரம்
பூவுலகில் எடுத்த நல் தேசிகா வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 07 ம் நாள், 20.04.2024, சனிக்கிழமை)
ஆசியதும் அரங்கன் படை உலகமெங்கும்
ஆற்றல்மிக்க ஞானப் படைகளாகத் தேறி
3. வாசிவென்ற ஞானிகள் துணையோடு
வல்லமைபட வருங்காலத்தை மாற்றும்
மாற்றுகின்ற மகா சக்திகளாக
மக்களையெல்லாம் ஞான வழி தேற்றுகின்ற
4. மிகையான ஞானப் படைகளாக
மொழிகுவேன் உலகமெல்லாம் பெருகி
பெருகியே அரங்கன் விரும்புகின்ற
பிசகில்லா ஞான யுகமாற்றம்
5. வருமுலகில் உலகம் கண்டு இனிதே
வையகத்தில் ஞானிகள் ஆட்சி ஞானவான் ஆட்சி
வல்லமைபட ஆறுமுகன் என் ஆசியோடு
வருங்காலம் கண்டு மாற்றம் பெறும்
6. மாற்றம் தரும் மாதவசி அரங்கன்
மண்ணுலகில் துறையூர் மண்ணில்
பிரணவக்குடில் படைத்து அவதாரம் எடுத்திருக்க
ஆற்றலோடு உலகோர் அரங்கன் குடில் நோக்கி வந்தால் போதும்

7. அகிலத்துக்கு பெருமாற்றம் இனிதே நிகழக்கூடும்
வரமென அரங்கன் வழி வர
வையகத்தில் அற்புதத்தை வடிவேலன் சடுதி நடத்தி
உலகமெங்கும் ஞான ஆட்சித் தருவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–